# 1300 பேருக்கு இலவச சிகிச்சை

புழல், அக்.4: சோழவரம் ஒன்றியம், பெருங்காவூர் ஊராட்சி துவக்கப்பள்ளியில் இலவச மருத்துவ முகாம் நடந்தது. பெருங்காவூர், மேட்டூர், மேட்டுப்பாளையம், பெரியார் நகர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 1300க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றனர்

முகாமை, ஊராட்சி தலைவர் வேலாயுதம் தொடங்கி வைத்தார். ஊராட்சி செயலர் கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கும்மிடிப்பூண்டி: காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மகாராஜா அக்ரசன் வித்யாலயா பள்ளியில், சமூக மனிதநேய சேவை மன்றம் சார்பாக ரத்ததான முகாம் நடந்தது. காந்தி வேர்ல்டு பவுன்டேஷன் அமைப்பு நிறுவனர் ராஜேஷ் தொடங்கி வைத்தார். சென்னை ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ரத்த வங்கியினர் இணைந்து நடத்திய முகாமில் 75 பேர் ரத்த தானம் செய்தனர்.

முகாம் ஏற்பாடுகளை ஆரம்பாக்கம் சமூக மனிதநேய சேவை மன்ற நிர்வாகிகள் ஜான் வெஸ்லி, பரணிகுமார், முருகன் செய்திருந்தனர்.